DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.65/2024

Deposition of LW2 examined as PW6 Date: 16.09.2025

| | |
|---|---|
| Name | சிவக்குமார் |
| Father's/Husband's Name | சின்னப்பன் |
| Village | பாண்டூர் |
| Taluk | |
| Age | 40/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.09.2025

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மேஸ்திரியாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 முதல் 5 வரையிலானவர்களை தெரியும். ஆஜர் எதிரியையும், ஆஜர் ஆகாத 1ம் எதிரி சந்துருவையும் எனக்கு தெரியும். கடந்த 30.06.2021 ம் தேதி இரவு சுமார் 08.00 மணி அளவில் நான் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டில் ராஜசேகர் என்பவர் டைல்ஸ் செய்வதற்கான Tools அடங்கிய பையை எனது வீட்டில் வைப்பதற்காக வந்தார். அப்போது 1ம் எதிரி சந்துரு அவரை ஏன் இங்கு வந்து ஜாமானை வைக்கிறாய் என்று கேட்டு அவரை அடித்தார். நான் ஏன் அவரை அடிக்கிறாய் என்று கேட்டேன். அதற்கு 1ம் எதிரி சந்துரு உன் வேலையை பார் என்று கூறினார். எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. அந்த பிரச்சனையில் 1ம் எதிரி என்னை குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி எனது வலது கையின் கட்டை விரலை கடித்து விட்டு ஓடி விட்டார். எனக்கு காயம் ஏற்பட்டது. நான் உடனடியாக என்னுடைய இருசக்கர வாகனத்தில் எனது மனைவியை அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன். எனக்கு கையில் ஏற்பட்ட காயத்திற்கு 2 தையல் போடப்பட்டது. நான் மேற்படி மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்து விட்டு வீட்டிற்கு வந்தேன். காவல்நிலையம் செல்லலாம் என்று நினைத்த பொழுது ஊர் பஞ்சாயத்து காரர்கள் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று கூறி பஞ்சாயத்தை அன்றைய தினமே கூட்டினர். அந்த கூட்டத்தில் எனக்கும் 1ம் எதிரி சந்துருவுக்கும் வாய்த்தகராறு வந்தது. என்னுடைய தம்பி கார்த்தியும் வந்து பேசினார். 1ம் எதிரி சந்துரு எனது தம்பியை நீ பெரிய ஆளு மயிறா என்று கூறி கட்டையால் தலையில் அடித்தார். அவர் மயக்கமாகி கீழே விழுந்து விட்டார். எனக்கும் 1ம் எதிரி சந்துருவிற்கும் கைகலப்பு வந்து விட்டது. 2ம் எதிரி லட்சுமிநாராயணன் என்னை இறுக்கமாக பிடித்துக்கொண்டு எனது தொண்டையை கடிடா என்று 1ம் எதிரி சந்துருவிடம் கூறினார். நான் திரும்பிவிட்டேன். எனது காதை 1ம் எதிரி சந்துரு கடித்ததில் எனது காது துண்டாக வந்து விட்டது. எனக்கு மயக்கம் வந்தது. என்னை ஊர்க்காரர்கள் இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு எனக்குஞ்முதலுதவி சிகிச்சைஅளித்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக

சிவக்குமார்

தஞ்சாவூர் செல்லுமாறு அறிவுறுத்தினர். நாங்கள் உடனடியாக தஞ்சாவூர் மீனாட்சி தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது துண்டாக ஆன காதினை மருத்துரிடம் கொடுத்தோம். அவர்கள் காதினை இணைக்க முடியாது செல்கள் இறந்து விட்டன என்று கூறினர். நான் மேற்படி மருத்துவமனையில் 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். மேற்படி நிகழ்வுக்கு பிறகுதான் என்னுடைய வலது காது இந்த வடிவத்தில் உள்ளது.(சாட்சிக்கு வலது காதில் மேல்புற பகுதி இல்லாமல் உள்ளது). எனக்கு காது இல்லாமல் இருந்ததால் நான் 2 ஆண்டுகள் வெளியில் வராமலேயே இருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு படிக்கத்தெரியுமா என்றால் தெரியும். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரியும் நானும் ஒரே ஊர் என்றால் சரிதான். ஒரே தெருக்காரர் ஆவார். எதிரி எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 30.06.2021 ம் தேதி எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் 08.30 மணிக்கு நடந்தது. சம்பவம் நடந்த போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 50 நபர்கள் இருந்தார்கள். போலிசார் என்னை எத்தனை தடவை விசாரணை செய்தார்களா என்றால் மீனாட்சி மருத்துவமனையில் வைத்து 1 முறை விசாரணை செய்தார்கள். நான் மீனாட்சி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் மீனாட்சி மருத்துவமனை மருத்துவரை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி எனது கட்டை விரலை கடிக்கவில்லை என்றாலும் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் மீனாட்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதற்கான விபத்து பதிவேடு வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரியல்ல. நான் சிகிச்சைக்கு சென்றிருந்தால் போலிசார் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரணை செய்திருப்பார் என்றால் சரியல்ல. நான் டைல்ஸ் போடும் வேலை செய்வதால் அந்த டைல்ஸ் போட்டுக்கொண்டிருக்கும்போது டைல்ஸ் உடைந்து தெறித்து எனது காதில் அடிபட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் தேதி மற்றும் இடத்தில் அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றாலும் அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி
பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு அவரால் சரியானதென்று
ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.